ரேட்டுகள் மிகக் குறைவாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே, இதை மனதில் கொண்டு, ஒப்பந்தக்காரர்கள் மனம் உவந்து முன் வந்து, ஒப்பந்தங்களை எடுக்கும் வகையில் அரசு அதற்கான ரேட்டுகளை உயர்த்திக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இருக்கிற நிலைமைகள் அனைத்தையும் கவனத்தில் கொண்டுதான் நாம் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகமான கொள்ளை லாபம் அடிக்கிற சூழ்நிலையை அரசே ஏற்படுத்திவிடக் கூடாது என்பதிலே அதிகம் கவனமாக இருக்கிறோம். ஆனால் பக்கத்து மாநிலங்களில் இருக்கிற ரேட்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், தமிழ்நாடு குறைவாகத்தான் கொடுக்கிறது என்ற காரணத்தால், தமிழகத்தில் இருக்கிற ஒப்பந்தக்காரர்கள் எல்லாம் பக்கத்து மாநிலங்களுக்கு போகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இவைகளை கவனத்தில் கொண்டு, எவ்வளவு தூரம் உயர்த்திக் கொடுத்தால், ஒப்பந்தக்காரர்களுக்குக் குறைந்த லாபத்தை வைத்துக் கொண்டு, நல்ல திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த முடியுமோ, அதை அரசு ஆராய்ந்து வருகிறது.

கரூர் நகரின் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா என் 979—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க (மின்வெட்டு காரணமாக) ஜெனரேட்டர் ஒன்றும், இரண்டு டீசல் என்ஜின்களும் வாங்க அனுமதி கேட்டு நகராட்சி அரசுக்கு கடிதம் எழுதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி: பொதுவாக மின்வெட்டு காரணமாக குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அந்த நகராட்சிக்கு ஒரு ஜெனரேட்டர் வாங்க அரசு முன்வருமா? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கரூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் கரூர் நகராட்சியின் நிதி நிலைமை நன்றாக உள்ளது. ஆகவேதான் ஆட்சித் தலைவர் கூட அந்த கரூர்

நகராட்சி உடனடியாக ஜெனரேட்டர்கள் வாங்கி பொருத்தி அதன்மூலம் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் அங்கே குடிநீர் பிரச்னை இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆகவே கரூர் நகராட்சிக்கு உடனடியாக நிதி உதவி தேவை இல்லை இப்போது. அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாகவும் இல்லை. ஆகவே உடனடியாக அந்த நகராட்சியே தன் நிதியிலிருந்து ஜெனரேட்டர்ஸ் வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்கனவே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திண்டிவனம் நகராட்சியில் பணிபுரியும் நகர சுத்தி தொழிலாளர்கள்.

*வினாஎண் 980 —திரு. கே. எம். தங்கமணி : தங்கமணி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகராட்சியில் நிதி நிலை பற்றாக்குறை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தர எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நிதி நிலை பற்றாக்குறை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட 12 நகர சுத்தி தொழிலாளர்களில் 6 நகர சுத்தி தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். மீதியுள்ள 6 நகர சுத்தி தொழிலாளர்கள் விடுப்பினால் ஏற்படுகின்ற காலி இடங்களில் (Leave Vacancy) தொடர்ந்து பணி செய்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள், ஆறு பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆறு பேர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது கொடுக்க முடியும் என்ற நிலையில் தான் பதில் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் நிதி நிலைமை காரணமல்ல. வேண்டுமென்றே அவர்களை பழி தீர்க்கும் நோக்கத்தில் அது செய்யப்பட்டிருக்கிறது. காரணம் அங்கே அவர்களுக்கு உதவியாக வந்து அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கவில்லை என்ற கோபம் காரணமாக நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணமாகப் பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதைப் பற்றி தீர விசாரித்து உண்மையாக ஐந்தாறு ஆண்டுகளாக வேலை செய்து வந்த அந்தத் தொழிலாளர்களை தற்காலிக வேலையாட்களாக நியமிப்பது என்பது நியாயமல்ல என்பதை உணர்ந்து ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பழிவாங்கவேண்டும் என்ற நோக்கம் இருந்திக்குமேயானால் இப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொண்